# கம்பன் காவியமும் தக்கையிசை ஓவியமும்

டாக்டர் நா. கணேசன், ஹூஸ்டன்
தொலைபேசி: 281-648-8636

## 1. கொங்குநாடும் தமிழும்

*பண்டை நாளிலிருந்து தனிச்சிறப்புடைய பண்பாடுகளைக் கொண்டொழுகும் தமிழ் மண்டலங்கள் ஐந்து என்பது இலக்கிய வழக்கு. 'வியன் தமிழ்நாடு ஐந்து' என்பது தண்டியலங்கார மேற்கோட் பாடல். 'தமிழ் மண்டலம் ஐந்து' என்கிறது திருமந்திரம். சேர, சோழ, பாண்டியர் ஆளுமை தொண்டை, கொங்கு நாடுகளில் வெவ்வேறு காலநிலைகளில் நிகழ்ந்தது. கொங்கு என்னும் சொல் பூந்தாது, தேன் என்ற பொருளில் வரும். நீர்வளம் குறைந்த கொங்குநாட்டில் பசுக்கூட்டம் பெருகி இருத்தலையும், கடின உழைப்பால் இயற்கையை மக்கள் வெல்லுதலையும் சங்கச் செய்யுள்கள் குறிப்பிடுகின்றன. தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் யானைப்படை, பருக்கைக் கற்களை உடைய மேட்டு நிலத்தில் வாழும் போர்வல்ல கொங்கர்களின் பசுக்கூட்டம் பரந்து செல்வதுபோல் விளங்குவன என்று ஒப்புமை கூறுமிடத்தில் 'சேண்பரல் முரம்பின் ஈர்ம்படைக் கொங்கர் ஆபரந்தன்ன' எனப் பதிற்றுப்பத்து பகருகிறது. மேலும், பாறைகளை வெட்டி நீக்கி ஆழப்படுத்திய கிணறுகளில் முகந்தெடுத்த உவர்நீரைப் பருக ஆநிரைகள் மொய்க்கும் கொங்குநாடு எனப் பதிற்றுப்பத்து சொல்லும்போது அந்நாட்டின் இயற்கை புலனாகிறது. தோளிலே தொங்கவிடும் சோற்று மூட்டையைக் கோத்த வலிய கையினையுடைய ஆடவர்கள் கிணறு வெட்டும் தொழிலில் புகுந்து, மிக்க தீப்பொறி உண்டாகப் பாறைகளை வெட்டித் தோண்டிய கிணற்றில் ஊறிய நீரை அருந்தச் செல்லும் கொங்குநாட்டு மக்களது மணிபூண்ட பசுக் கூட்டங்கள் கிளப்பிய செம்மண் புழுதி வானத்தின்கண் மிக்குத் தோன்றும் என்பார் குடவாயில் கீரத்தனார்.*

*தோட்பதன் அமைந்த கருங்கை ஆடவர்
கனைபொறி பறிப்ப நூறி வினைப்படர்ந்து
கல்லுறுத்து இயற்றிய வல்உவர்ப் படுவில்
பாருடை மருங்கில் ஊறல் மண்டிய
வன்புலம் துமியப் போகிக் கொங்கர்
படுமணி ஆயம் நீர்க்கு நிமிர்ந்துசெல்லும்
சேதா அடுத்த செந்நிலக் குரூஉத்துகள்
அகலிரு விசும்பின் ஊன்றித் தோன்றும்.*

*- அகநானூறு*

*வறட்சியை எதிர்த்து வாழும் கொங்குநாடு இன்றும் தொழில் வளத்தில் முன்னணியில் முனைகிறது. கொங்கர் காலமெல்லாம் தமிழுக்குப் பேராதரவை அளித்துவந்தனர். முதன்முதலாகக் கண்ணகியைத் தெய்வமாகத் தொழுது ஏத்தியவர் இவர்களே. சிலப்பதிகாரமே தெரிவிக்கும் செய்தியிது. கோவலனும், கண்ணகியும் கவுந்தியடிகளைத் துணைக்கொண்டு மதுரை செல்லும் வழியில் ஓர்நாள் வேடுவர் ஊரிலே உள்ள கொற்றவை கோவிலில் தங்கினர். அப்போது வேடுவ மகளிர் துர்க்கைக்கு விழாவெடுத்து வரிக்கூத்து ஆடினர். கூத்தின் இடையிலே, காளியின் ஆவேசங்கொண்ட சாலினி, அங்கே கோவலனுடன் ஒதுங்கியிருந்த கண்ணகியை நோக்கி,*

இவளோ,
கொங்கச் செல்வி, குடமலை யாட்டி,
தென்தமிழ்ப் பாவை, செய்தவக் கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய
திருமா மணி

என்று பாராட்டினாள். கொங்குமண் தங்கம் போன்ற தமிழ்க் கருவூலங்களை ஈந்தது. இலக்கிய நூல்களுள் கொங்குவேளிர் செய்த பெருங்கதையும், இலக்கண நூல்களுள் பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூலும், உரைநூல்களில் அடியார்க்கு நல்லார் எழுதிய சிலப்பதிகார உரையும் கொங்குநாட்டிற்குப் பெருமை சேர்ப்பவை. சிலப்பதிகார உரை தமிழிசையை, இசைக்கருவிகளை அறியவும் மேலும் ஆராயவும் உறுதுணை புரிகிறது. அடியார்க்கு நல்லார் விசயமங்கலத்தை அடுத்த நிரம்பை என்னும் ஊரினர். முத்தமிழ்க் காப்பியமாகிய சிலம்புக்கு உரை எழுத ஊக்குவித்த காங்கேயனை அவர் வியந்து போற்றுவார்,

கூற்றைத் தவிர்த்துஅருள்
பொப்பண காங்கேயர்கோன் அளித்த
சோற்றுச் செருக்குஅல்லவோ
தமிழ் மூன்றுரை சொல்வித்ததே.

பிறமொழி நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் பெயர்த்தெழுதி வளமை ஊட்டவும் கொங்கர் உதவினர். இந்நாளிலும் ஆங்கிலத்தில் இலங்கும் அறிவியல் நூல்கள் தமிழாக்கம் பெறல் வேண்டும். மகாபாரதத்தைத் தமிழில் தந்த வில்லிபுத்தூர் ஆழ்வாரைக் கொங்கு நாட்டானாகிய ஆட்கொண்டான் புரந்து காத்தான். வேற்று மொழி பேசுவோர் அரசு வீற்றிருந்த நாளிலும் தமிழுக்கு இவன் செய்த வள்ளண்மையை ஆழ்வார் மகன் வரந்தருவார் பாரதப் பாயிரத்தில் சொல்வார்,

கொங்கர்குல வரபதி ஆட்கொண்டான் என்றொரு
வண்மைக் குரிசில் தோன்றி
வெங்கலியின் மூழ்காமல், கருநடப்பேர்
வெள்ளத்து வீழாமல், நான்காம்
சங்கமென முச்சங்கத் தண்டமிழ்நூல்
கலங்காமல் தலைகண்டானே!

வில்லிபுத்தூராரும் தமது பாரதத்துள் பாடுவார்,

கோவல்சூழ் பெண்ணை நாடன்
கொங்கர்கோன், பாகை வேந்தன்
பாவலர் மானம் காத்தான்
பங்கயச் செய்கை என்ன.

மகாபாரதத்தை மட்டுமன்றி, இராமாயணத்தையும் எளிய இசைக்காப்பியம் ஆக்கினர் கொங்கர்கள். கம்பர் சொல்லால் கட்டிய கலைக்கோயிலை அடியிலிருந்து தலைவரை பின்பற்றி, மூன்றில் ஒன்றாகச் சுருக்குவது தக்கை இராமாயணம். ஈடு இணையற்ற கம்பர் காவியத்தின் இலக்கிய நயத்தைப் பாமரரும் அள்ளிப் பருகுமாறு கனிச்சாறாக்கித் தந்தவர் பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த எம்பெருமான் கவிராயர் ஆவார். அவர் தம்மைப் புரந்தளித்த மோரூர் நல்லதம்பியைப் பற்றிச் சொல்வார்,

*அவனும் சடையன் காராளன்*
*அவன்தன் ஊரும் வெண்ணெய்நல்லூர்*
*இவனும் நலதம்பிக் காங்கேயன்*
*இவன்தன் ஊரும் மோரூராம்*
*அவனும் கண்ணன் சரராமன்*
*ஆகவ ராமன் இவனும்கண்ணன்*
*இவனும் அவன்போல் உலகுதனில்*
*இராம காதை பாடுவித்தான்.*

*நீருக்கும், நெருப்புக்கும் இரையாக இருந்த தேவார ஏடுகளைக் காத்தமையால் திருமுறை கண்ட சோழன் என்ற விருதுப்பெயரை இராசராசன் பூண்டான். இருபதாம் நூற்றாண்டில் சங்க நூல்களைக் காத்தளித்த உ. வே. சாமிநாதையரைப் போல், தக்கை இராமாயண ஓலைச் சுவடிகளை அழியாது காத்த திருச்செங்கோடு அ. முத்துசாமிக்கோனார், பெரும்புலவர் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர், பேராசிரியர் கு. அருணாசலக் கவுண்டர், விடுதலை வீரராய கவிஞர் ந. கந்தசாமி முதலியார் முதலிய தவப்புதல்வரை எண்ணித் தமிழன்னை, தான் ஈன்ற பொழுதைவிடப் பெரிதுவப்பாள்.*

## 2. கம்பரும் கொங்குநாடும்

*கொங்குநாடு அகல்விளக்குபோலச் சுற்றிலும் மலைகள் சூழ விளங்க, அவ்விளக்கின் நடுவில் இலங்கும் திரியாகக் காவிரிநதி திகழ்கிறது. கொங்குமண்ணை வளமாக்கிய பின்னரே பொன்னி சோணாடு புகுகிறாள். கம்பர் வாழ்க்கை நிகழ்ச்சி ஒன்று வழிவழியாக வழங்கிவருகிறது. சோழன் பொன்னி நதியைப் பாடுபொருளாக நாட்டிப் பாடச்சொல்ல, கம்பர் காவிரியாறு வேளாளர் வீட்டில் விருந்துண்டார் கைகழுவிய எச்சில்கல நீர் என்றாராம். சினமுற்ற மன்னன் எச்சில் பரிசோதனை காட்ட ஆணையிட்டுப் படகில் கம்பரை ஏற்றிக்கொண்டு தானும் உடன் சென்றான். காவிரியில் எச்சில் இலைகள் மிதத்தலை விருந்தின் மிச்சம் என்று கம்பர் சொன்னாராம். கம்பர் துன்பம் பொறாத காவிரித்தாய் வெள்ளப் பெருக்கெடுத்தாள். உழவருடன் ஓடோடி வந்த சோழன் கம்பரை வேண்ட அவரும் காவிரித் தாயைப் பணிந்து,*

***கன்னி அழிந்தனள், கங்கை திறம்பினள்,***
***பொன்னி கரைகடந்து போயினளென்று - இன்னீர்***
***உரைகிடக்கல் ஆமோ? உலகுடைய தாயே!***
***கரைகடக்கல் ஆகாது காண்***

*என்று பாடினார். உடனே வெள்ளம் அடங்கியது. கம்பருக்கு என்ன பரிசில் வேண்டும் என்று சோழன் கேட்டுக்கொள்ள, வேளாளர்கள் சோழ மன்னனுக்குக் கொடுக்க வேண்டிய அரைக் கழஞ்சு பொன் திருமண வரியை தமக்கு அளிக்க ஆணைதர வேண்டினார்.*

***கதுவிவரு பொன்னி கரைகடவா வண்ணம்***
***பதுமமுகக் கம்பரவர் பாட - வதுவைவரி***
***மாடை அரைக்கழஞ்சு வண்கம்பர்க்கு ஈந்தபரிசு***
***ஏடர்குலோத் துங்கன் எழுத்து***

*என்பது அச்செப்பேட்டு வாசகம் ஆகும். இதே நிகழ்ச்சி கொங்குப் புலவர் பட்டயம் என்னும் ஓலைச்சுவடியில் நாட்டுப்புற நடையில் நளினமாக நவிலப்பெற்றுள்ளது. கதிரவனும், திங்களும், காவிரியும் நிலவும் காலமெல்லாம் தாங்களும், தம் பரம்பரையினரும் கம்பநாடர்க்கு அடிமை எனக் கொங்குநாட்டார் செய்நன்றி மறவாது சாசனம் வரைந்தனர். 'கல்லும் காவேரியும் சந்திராதித்தர் உளமட்டும் கம்பநாடன் சொல்லிய செந்தமிழ்க்கு*

அடிமை நாங்கள்' என்பது பழம்பாடல் சொற்றொடர். 'கம்பரைக் காவேரி எச்சிலைக் காட்டுதற்கு மாத்தெளித்தே அடிமைப்புகுவார் கொங்குமண்டலமே' என்பது கொங்கு மண்டல சதகப் புகழ்மொழி.

கொங்கு நாட்டாரின் திருமணச் சீர்கள் யாவும் தனித்தமிழால் ஆனவை. பிறமொழிக் கலப்பு இன்றியே கொங்கு வேளாளர் மணவினைகள் காலங்காலமாய் நிகழுகின்றன. இந்தச் சிறப்பைத் தமிழகத்தின் பிறபகுதித் திருமணங்களில் காணுதல் அருமை. தற்காலத்தில் கல்வியும், எழுச்சியும் தமிழர் மனங்களில் மறுமலர்ச்சியை உருவாக்கி உள்ளன. தமிழுக்கு ஏற்றம் தந்து, திருமுறைகள், வாழ்த்துரை கொண்டே கலியாணங்கள் நடைபெறலாம் என்பதே சிலருக்கு வியப்பாக உள்ளது. தனித்தமிழ் மணச்சீர்களை என்றென்றும் கைக்கொண்டு கடைப்பிடித்தோர் கொங்கர்களே. கம்பர் என்பது ஒருவர் பெயர் மாத்திரம் அல்ல. அது ஒரு குடிப்பெயர் என்பது வீரபத்திரக் கம்பர் என்பவர் செய்த திருவிளையாடல் பயகர மாலை என்னும் நூல் இருப்பதால் தெரிய வருகிறது. கம்பர் வழிவந்தோர் ஒருவர் பாடிக்கொடுத்த மங்கல வாழ்த்து கொங்குநாட்டுத் திருமணங்களில் பாடப்பெறுகிறது. பரம்பரையாக மணமக்கள் ஊர்ப்பகுதிகளில் வாழ்ந்து வரும் நாட்டுப் புலவரைப் பாலும், வெண்கல வட்டிலில் இனிப்பும், பழமும் உண்ண வைத்துக் கொடைப் பணமும் அளிப்பது கொங்குத் திருமணச் சீர்களுள் முக்கியமானது. வதுவை வரிபெறும் ஐந்து கலைஞர்களை இனங்காட்டுகிறது மங்கல வாழ்த்துப் பாடல்.

பட்டன் புலவன் பண்பாடி தக்கைகொட்டி
திட்டமாய்ச் சோபனம் சொல்லிமுன் னேவர
வன்மைசேர் கூத்தி வகைபெற நின்று
நன்மைசேர் பரத நாட்டியம் ஆடிவர -

கோலாகலமாய் மாப்பிள்ளை பெண்கொள்ளப் போம்போது அவனை பட்டன் எதிர்நின்று வாழ்த்துவான். இயல் தமிழால் புகழ்ந்து பாடுவான் புலவன். இசைத்தமிழ் வல்ல பண்பாடியும், தக்கைகொட்டும் தாளகாரனும், நடனம் வல்ல நங்கையரும் ஊர்வலத்தை அலங்கரித்துச் செல்வர்.

## 3. தக்கை என்னும் நாட்டார் தாளக்கருவி

தக்கை என்பது இருமுகத் தோற்கருவி. கோயில் வழிபாடுகள் நடக்கும்போது வலப்பக்கத்தில் குணில் கொண்டு அடித்து முழக்கப்பட்டது. அடியார்க்கு நல்லார் தக்கையை அகப்புற முழவு என்கிறார். தாழ்ந்த இசையில் பாடும் ஒருவனைத் தக்கு சுருதியிலே பாடுகிறான் என்பது நடைமுறை வழக்கு. தாழ்ந்த குரலை உடையது தக்கை என அழைக்கப்பட்டது போலும். தற்போது தமிழகத்தில் அருகிவிட்ட தக்கை திருவரங்கத்தில் வாசிக்கப் பெறுகிறது. தக்கை முழவு உடுக்கையைவிடப் பெரிதாகவும், தவண்டையைவிடச் சிறிதாகவும் உள்ளது. 'சச்சரி, கொக்கரை, தக்கை' என்று காரைக்கால் அம்மையாரும், 'கத்திரிகை, துத்திரி, கறங்குதுடி, தக்கையொடு இடக்கை, படகம்' என்று சம்பந்தரும், 'தக்கை, தண்ணுமை, தாளம், வீணை, தகுணிச்சம், கிணை, சல்லரி' என்று சுந்தரரும் இசைக்கருவிப் பட்டியல் இடுகின்றனர். மேனி நீறு பூசி, தக்கைகொள் பொக்கணம் இட்டு, கண்டவர் மனம் கவர்ந்து, பைங்கயல் கண்ணி பாகமும் அமர்ந்து ஈசன் அருள் செய்வதாகச் சம்பந்தர் வெங்குருப் பதிகத்துள் குறிக்கிறார். அப்பர் இறைவனை வருணிக்கும் திருத்தாண்டகம் இது,

குழையார் திருத்தோடு காதில் கண்டேன்;
கொக்கரையும் சச்சரியும் கொள்கை கண்டேன்;
இழையார் புரிநூல் வலத்தே கண்டேன்;
ஏழிசை யாழ், வீணை முரலக் கண்டேன்;

தழையார் சடைகண்டேன்: தன்மை கண்டேன்;
 தக்கையொடு தாளம் கறங்கக் கண்டேன்;
மழையார் திருமிடறும் மற்றும் கண்டேன் -
 வாய்மூர் அடிகளை நான் கண்டவாறே!

கம்பரும் கும்பிகை, திமிலை எனத் தொடங்கும் செய்யுளில் தக்கையைப் பயனாக்குகிறார். 'வார்த்தொகை சூழ்தரு மத்தளி, தக்கை, போர்த்த வலம்புரி, பேரி கலித்த' என்கிறது கந்த புராணம். திருவிளையாடல் புராணப் பாடல் ஒன்று,

ஆர்த்தன தடாரி, பேரி; ஆர்த்தன முருடு, மொந்தை;
ஆர்த்தன உடுக்கை, தக்கை; ஆர்த்தன படகம், பம்பை;
ஆர்த்தன முழவம், தட்டை; ஆர்த்தன சின்னம், தாரை;
ஆர்த்தன காளம், தாளம்; ஆர்த்தன திசைகள் எங்கும்.

உடுக்கையை இசைத்துப் பாடும் பாட்டு உடுக்கைப் பாட்டு என்று பெயர் பெறுமாப்போலே, தக்கையை முழக்கிக் கொண்டு எம்பெருமான் கவிராயர் சொல்லில் வடித்த கம்பராமாயண விளக்கம் தக்கை ராமாயணம் என வழங்கி வரலாயிற்று.

## 4. கம்பர் தக்கை இராமாயணங்கள்

புகழ்பெற்ற காவியம் ஒன்றன் அழகு, புதைபொருள், நயம், நுண்பொருள் அனைத்தையும் எல்லோரும் சுவைக்க இசைகனியப் பாடியளித்தார் எம்பெருமான். வில்லுப் பாட்டுப் பாடுவதுபோல, தக்கையை இசைத்துக்கொண்டு பாட எழுந்தது தக்கை இராமாயணம். எம்பெருமான் கவிச் சக்கரவர்த்தி கம்பனை ஆழ்ந்து பயின்று, நினைந்து நினைந்து உருகித் திளைத்ததால் விளைந்த பரவசத்தை, இன்ப அனுபவத்தைப் பாமரரும் புரியும் வகையில் நாட்டுப்பாடல்களாய் மாற்றி உருச்சமைத்தார். கொச்சகக் கலி என்னும் யாப்புவகையில் துள்ளல் ஓசையும், ஒலிநயக் கவர்ச்சியும் மிகுதி. நாட்டார் பாடல்களின் செழுமையுற்ற வடிவமே அது. கலித்தொகை, திருவாசக நூல்களில் ஓரிரு பாடல்கள் இப்பாவினத்தில் பயில்கின்றன. விருத்தம் என்னும் ஒண்பாவில் கம்பரை விஞ்சமுடியாது என்று அதை விலக்கி, கொங்கு நாட்டில் தக்கைப்பாட்டு என்று வழங்கும் கொச்சகக் கலியாப்பில் ஒற்றை, இரட்டை, குடகம் என்ற வரிப்பாடல்களால் இசைத்தமிழ்க் காப்பியம் ஒன்றை முழுதுமாகப் படைத்தளித்துள்ளார். அரிய புதுமை இது. நாற்சீரால் ஒற்றை, அறுசீர் அமைப்பில் இரட்டை என்னும் தக்கைப் பாடல்கள் விரவியுள்ள தமிழ் இலக்கியம் தக்கை இராமாயணம் ஒன்றே. ஒற்றை, இரட்டை வரிப்பாட்டு என்னும் மரபை அடியார்க்கு நல்லார் எடுத்து இயம்புவார். 'வாரம் இரண்டும் வரிசையிற்பாட' என்ற சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை அடிக்கு உரை காண்கையில் அவர் 'வாரமாவது பற்று, அஃதிருவகைப்படும். ஓரொற்றுவாரம், ஈரொற்று வாரம் என்னும் செய்யுள். இவை தாளத்துக்கு ஒரு மாத்திரையும், இரண்டு மாத்திரையும் பெற்று வரும்' என்பார். இதற்கு இலக்கியமாய் இருப்பது தக்கை ராமாயணம் மட்டிலுமேதான்.

எளிய பதங்கள்; எளிய நடை; எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம்; பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியம் ஒன்று செய்து தருபவன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர்தருபவன் ஆகிறான். ஓரிரண்டு வருடத்து நூற்பழக்கம் உள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவு படாமலும் நடத்துதல் வேண்டும் என்று பாஞ்சாலி சபத முகவுரையில் எழுதுவார் பாரதியார். நானூறு வருடங்களுக்கு முன்னரே இதைச் செய்து, தமிழின் வளத்தைப் பெருக்கி நூதன சாதனை செய்துள்ளார் கவிஞர் எம்பெருமான்.

நாட்டார் பாடலாய் விளங்கும் 'கோவிலன் கதை' போன்றன இலக்கியநயம் பொருந்தியவை அல்லது மூலநூலைத் தழுவியவை என்று சொல்வதற்கில்லை. செய்யுளால்

ஆன கதைச்சுருக்கங்கள் மூலத்தைக் காட்டிலும் கடின நடையில் அமைவதும் உண்டு. அவற்றுக்குச் சுருக்கம் ஒன்றே குறிக்கோள்; புதுமை அல்ல. கம்பனின் மாற்றுருவமாக அமைந்த தக்கை இராமாயணம் மேலே சொன்னவற்றிலிருந்து முற்றிலும் வேறானது. கம்பன் கவித்திறக் கவினை மெருகூட்டிச் செம்மையுடன் குடிமக்கள் எல்லாரும் சுவைக்க வகைசெய்திருக்கிறார். கம்பன் படைப்பை முழுதும் கற்றுணர்ந்து, கம்பனின் வழிநூலாக இயற்றப்பட்ட தக்கை இராமாயணம் அனைய இலக்கிய வகை எம்பெருமான் கவிராயருக்கு முன்னும் இல்லை. பின்னும் உண்டாகவில்லை. சுந்தரர் கோடிட்டுக் காட்டிய தமிழ் அடியார் திருப்பெருமைகளைச் சேக்கிழார் விரித்துப்பாடி மக்களை அடைந்தார். ஈடில்லாக் கம்பனை எம்பெருமான் சுருக்கமான இசைத்தமிழ் ஆக்கி மக்களிடையே பரப்பினார். கம்பனை எப்படித் தக்கை நூல் எளிமை, தெளிவு, பொருட்பொலிவுகளுடன் சுருக்கி விளக்குகிறது என்பதைப் பார்ப்போம்.

கம்பர் நாட்டுவளம் பற்றி அற்புதமாகச் சொல்லுவார்,

வரம்பு எலாம் முத்தம், தத்தும் மடை எலாம் பணிலம், மாநீர்க்
குரம்பு எலாம் செம்பொன், மேதிக் குழி எலாம் கழுநீர்க்கொள்ளை,
பரம்பு எலாம் பவளம், சாலிப் பரப்பு எலாம் அன்னம், பாங்கர்க்
கரம்பு எலாம் செந்தேன், சந்தக்கா எலாம் களிவண்டு ஈட்டம்.

தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளை கண் விழித்து நோக்க,
தெண்திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ.

இவ்வருணனையை வரம்புகளிலே வளைசங்கு, தண்ணீர் தாவிவரும் மடைகளிலே முத்து, அணைகளிலே செம்பொன், பள்ளங்களிலே கழுநீர் மலர், பரம்பு அடித்த வயல்களிலே பவளம், செந்நெல் பரப்பு எங்கும் அன்னம், கரும்புக் காடுகளிலே தேன்கூடுகள், குளிர்ந்த சோலைகளிலே வண்டுகள் என்று நிரல்நிரை அணியாகவும், யாழிசை போன்ற வண்டின் ரீங்காரம், கரும்பாலையில் அமலை, ஆறுபாய் அரவம் முழங்க, அதன் பின்னணியில் மயில்கள் ஆட மருதம் கொலுவிருக்கும் எனத் தக்கை இராமாயணம் பாடும்.

வரம்புமடை குரம்புபள்ளம்
வளைதரளம் பொன்கழுநீர்
பரம்புசெந்நெல் கரும்புதண்கா
பவளம்அன்னம் தேன்அளிகள்
நரம்பின்இசை ஆலைஒலி
நதிமுழங்க மயிலாட
விரும்புகஞ்சம் விளக்குஏந்த
வீற்றிருக்கும் மாமருதம்.

கோசலை நாட்டு வளப்பத்தை மேலும் கம்பர் விவரிப்பார்,

நீரிடை உறங்கும் சங்கம், நிழலிடை உறங்கும் மேதி,
தாரிடை உறங்கும் வண்டு, தாமரை உறங்கும் செய்யாள்,
தூரிடை உறங்கும் ஆமை, துறையிடை உறங்கும் இப்பி,
போரிடை உறங்கும் அன்னம், பொழிலிடை உறங்கும் தோகை.

படை உழ எழுந்த பொன்னும், பணிலங்கள் உயிர்த்த முத்தும்,
இடறிய பரம்பில் காந்தும் இனமணித் தொகையும், நெல்லின்
மிடை பசுங்கதிரும், மீனும், மென்தழைக் கரும்பும், வண்டும்,
கடைசியர் முகமும், போதும் கண் மலர்ந்து ஒளிரும் மாதோ.

இவ்விரு பாடலுக்கும் எம்பெருமான் பாவலரின் இசைச் சுருக்கம் இதோ,

நீரில்வளை தாரில்அளி
நிழல்எருமை மலரின்அம்மை
போரில்அனம் தூர்ஆமை
பொழிலில்மஞ்ஞை உறங்கிடவே
பாரில்அம்பொன் பணிலம்முத்தம்
பன்மணிகள் செந்நெல்கன்னல்
காரிமள்ளர் மாதர்முகம்
கண்மலரும் கழனிஎலாம்.

தம்குழந்தைகளுக்குச் சங்கில் பால்புகட்டும் தாய்மார்களின் கை குவிந்திருப்பது ஏன் தெரியுமா? கை - தாமரைப்பூ; சங்கு - நிலவு. வெண்ணிலவில் செங்கமலம் குவிவது இயல்பு தானே. கோசலை நாட்டின் எல்லையைக் காண்டல் சாத்தியமே இல்லை. அதனால் சரயு நதி பலகால்களாய் ஓடியும் எல்லை கண்டிலள். கம்பன் கலையும், எம்பெருமான் இசைத்தமிழும் கண்டு இன்புறுவோம்.

தாலி ஐம்படை தழுவு மார்பிடை
மாலை வாயமுது ஒழுகு மக்களைப்
பாலின் ஊட்டுவார் செங்கை, பங்கயம்
வால்நிலா உறக் குவிவ மானுமே.

சோலை மாநிலம் துருவி யாவரே
வேலை கண்டு தாம் மீள வல்லவர்?
சாலும் வார்புனல் சரயுவும் பல
காலின் ஓடியும் கண்டது இல்லையே.

- கம்பன்

பாவையர்தம் பாலகரைப்
பால்அடிசில் ஊட்டிடும்கை
மாவைஅமர் செங்கமலம்
வான்நிலவால் குவிவதுஒக்கும்
காவைஅணி திருநாட்டைக்
காண்பவர்ஆர் சரயுஎனும்
பூவைபல கால்நடந்தும்
பூமிஎல்லை கண்டிலளே.

- எம்பெருமான்

சீதைக்குச் சூட்டுதற்குரிய மாலைபோலவே சிவன் வில்லை இராமன் மிக எளிதாக எடுத்தான். விரைவில் எடுத்த செயலை யாரும் காண நேரம் போதவில்லை. ஆனால் வில் இற்ற ஒலி யாவரும் கேட்டனர். ஒரு நொடியில் வில் ஏந்தி முறித்த பெற்றியைப் பாடும் பாடல்களைப் பார்ப்போம்.

ஆடக மால்வரை அன்னது தன்னை
தேட அருமாமணி சீதைஎனும் பொன்
சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
ஏடுஅவிழ் மாலை இதுஎன்ன எடுத்தான்.

தடுத்து இமையாமல் இருந்தவர் தாளில்
மடுத்ததும், நாண்நுதி வைத்ததும் நோக்கார்
கடுப்பினில் யாரும் அறிந்திலர், கையால்
எடுத்தது கண்டனர், இற்றது கேட்டார்.

- கம்பன்

விடரும் மடவாரும் இவைகூற
 விடையும் களிறும்போல் நடந்துசென்று
தொடரும் சிலைதன்னைச் சீதைதன்மேல்
 சூட்டும் தொடைபோலக் கடிதுஎடுத்தான்;
அடரும் பணிபோலும் சிலைநாணை
 ஐயன் ஏற்றிட்டது யாவர்கண்டார்?
படரும் முறிந்துஓசை கேளார்யார்?
 பதினாலு உலகுஎங்கும் நடுங்கியதே.

- எம்பெருமான்

உலாவியல் படலத்திலே ஒருத்தி, இராமனைக் கண்டதும் கண்வழியே தன்உள்ளத்தில் புகுந்துவிட்ட கள்வனாகக் காதல் கொள்கிறாள். வெளியே தப்பிப் போகாதபடி அவன் நுழைந்த அந்த வாசலை அடைப்பாள் போலச் சிக்கெனக் கண்களை மூடிவிடுகிறாள். பின் தோழியை அழைத்துத் தன் கையைப் பற்றிப் பைய அழைத்துப் போய்ப் படுக்கையிலே சேர்க்கும்படி அவளை வேண்டுகிறாள். கம்பர் படக்காட்சி இதோ,

மைக்கருங் கூந்தல் செவ்வாய்
 வாள்நுதல் ஒருத்தி, உள்ளம்
நெக்கென உருகு கின்றாள்
 நெஞ்சிடை வஞ்சன் வந்து
புக்கனன் போகா வண்ணம்
 கண்எனும் புலங்கொள் வாயில்
சிக்கென அடைத்தேன், தோழி!
 சேருதும் அமளி என்றாள்.

இதையே எம்பெருமான் இருவரிகளாய்ச் சுவைகுன்றாது சுருக்கும் வனப்பு இது,

கண்ணில்வந்தான் போகாமல்
 கண்ணிமையாம் கதவடைத்தேன்
எண்ணினவாறு அமளியின்மேல்
 எனைக்கொடுபோ பாங்கிஎன்பாள்.

காதல் சித்திரம் மற்றொன்றைக் கம்பர் புனைவார்,

ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் உழையள் ஆகும்
சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்;

*மாதவள் தானும் ஆண்டு வந்து நீர் உண்டு மீளும்*
*போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்.*

*வில்லியல் தடக்கை வீரன் வீங்கு நீர் ஆற்றின் பாங்கர்*
*வல்லிகள் நுடங்கக் கண்டான் மங்கைதன் மருங்குல் நோக்க*
*எல்லியம் குவளைக் கானத்து இடைஇடை மலர்ந்து நின்ற*
*அல்லிஅம் கமலம் கண்டாள் அண்ணல்தன் வடிவம் கண்டாள்.*

*இதையே எம்பெருமான் எளிய நடையில் தாளத்துடன் பாடுவார்,*

*சீதைநடைக்கு ஒதுங்கிஅன்னம்*
*செல்கைகண்டு மால்சிரித்தான்;*
*நாதன்நடைக்கு ஆனைஅஞ்சி*
*நடக்கைகண்டு திருநகைத்தாள்;*
*மாதின்இடைக்கு உவமைஒப்போ*
*வஞ்சிஎன்பான், மனம் உவந்தான்;*
*ஆதிஉருக் குவளைஎனும்*
*அழகுகண்டாள், அகம்மகிழ்ந்தாள்.*

*சீதையைப் பிரிந்த இராமன் கடந்த கால நிகழ்ச்சிகள் பலவும் நினைவுக்கு வர, இரவு முழுதும் கண்விழித்தே இருந்தானாம். இதனைக் கம்பர் கூறுவார்,*

*பூ ஒடுங்கின, விரவு புள் ஒடுங்கின பொழில்கள்,*
*மா ஒடுங்கின, மரனும் இலை ஒடுங்கின, கிளிகள்*
*நா ஒடுங்கின, மயில்கள் நடம் ஒடுங்கின, குயில்கள்*
*கூ ஒடுங்கின, பிளிறு குரல் ஒடுங்கின களிறு.*

*மண் துயின்றன, நிலைய மலை துயின்றன, மறுஇல்*
*பண் துயின்றன, விரவு பணி துயின்றன, பகரும்*
*விண் துயின்றன, கழுதும் விழி துயின்றன, பழுதுஇல்*
*கண் துயின்றில, நெடிய கடல் துயின்றன களிறு.*

*இவ்விரு பாடல்களையும் ஒரே பாட்டாக்குவார் எம்பெருமான்,*

*வானம் உறங்கும் வையகம் உறங்கும்*
*மலையும் உறங்கும் மாமரம் உறங்கும்*
*ஏனம் உறங்கும் வெங்கரி உறங்கும்*
*இயலும் உறங்கும் ஏழிசை உறங்கும்*
*மீனம் உறங்கும் புள்இனம் உறங்கும்*
*மேலோர் உறங்கும் யோகியர் உறங்கும்*
*கானம் உறங்கும் முன்கழுது உறங்கும்*
*கண்ணன் ஒருவன் கண் உறங்காதே.*

*வானர வீரர்கள் சானகியைத் தேடித் தென்திசை செல்லும் வழிவிவரம் சொல்கிறார் கம்பர். தமிழகத்து வடவெல்லையான வேங்கட மாமலையில் யானைகளும், புலிகளும், மால் அருளை வேட்டு தவமுனிவரும், மறையோரும் வாழ்கின்றனர்.*

வடசொற்கும் தென்சொற்கும் வரம்பு ஆகி,
நான்மறையும், மற்றை நூலும்
இடை சொற்ற பொருட்கு எல்லாம் எல்லை ஆய்,
நல் அறிவுக்கு ஈறு ஆய், வேறு
புடைசுற்றும் துணைஇன்றி, புகழ் பொதிந்த
மெய்யேபோல் பூத்து நின்ற
அடைசுற்றும் தண்சாரல் ஓங்கிய
வேங்கடத்தில் சென்று அடைதிர் மாதோ.

சூது அகற்றும் திருமறையோர் துறைஆடும்
நிறை ஆறும், சுருதித் தொல்நூல்
மாதவத்தோர் உறை இடமும், மழை உறங்கும்
மணித் தடமும், வான மாதர்
கீதம் ஒத்த கின்னரங்கள் இன்நரம்பு
வருடுதொறும் கிளக்கும் ஓதை
போதகத்தின் மழக்கன்றும் புலிப்பறழும்
உறங்கு இடனும் பொருந்திற்று அம்மா!
- கம்பன்

மைஇல் மறைகட்கும் பலகலைக்கும்
மாசில் அறிவுக்கும் வரம்புஆகி
பொய்யில் மறைமெய்யே போலநின்ற
புனிதன் திருவேங் கடச்சயிலம்
தொய்யும் மறைவாணர் உறையுள்எங்கும்
சுரர்மா தவரோடும் தீர்த்தம்எங்கும்
வெய்யில் மறைமேகச் சோலைஎங்கும்
வேழம் புலிதுஞ்சும் சிகரம்எங்கும்.
- எம்பெருமான்

வைணவக் காப்பியம் பாடிய கம்பருக்குத் திருமங்கை ஆழ்வார் பாசுரம் மனதில் தோன்றுகிறது. அப்பாசுரத்தைச் சீதையை அசோகவனத்தில் வாட்டும் பழைய நினைவுகளில் ஒன்றாய் அமைக்கிறார். ஏழை வேடனைத் தன்தம்பி என்றவன் ஏந்திழை துயர் ஏன் இன்னும் துடைக்கவில்லை என்று ஏங்குகிறாள் மிதிலைச்செல்வி. நம் மனைகளில் கூரை மேலுள்ள காக்கை சற்றே தலையைச் சாய்த்துத் தரையை நோக்கும். இதனால் காகத்துக்கு ஒருகண் என்ற கதையுண்டு. ஏன் தெரியுமா? இந்திரன் மகன் காக வடிவில் சீதையைத் துன்புறுத்தியது தெரிந்து இராமன் அம்பு விடுத்தான். அவ்வம்பால் காகங்கள் ஒரு கண் இழந்தன. இரகுநாயகனின் உண்மைத் தூதுவன் எனச் சானகி உய்த்துணரச் சில அடையாளங்களைக் கணையாழி அளிக்கும்போது அனுமன் அறிவித்ததாகப் பெரியாழ்வார் இந்நிகழ்ச்சியைத் தெரிவிக்கிறார். நன்றியறிதலுக்காக இராமன் முதுகை நீவிவிட, அணில்கள் தம்முதுகின்மேல் முப்பட்டைகள் அடைந்தாகத் தொண்டர் அடிப்பொடியாழ்வார் கூறுவார். அதை ஒத்ததே இதுவும். திருமங்கை மன்னன், பெரியாழ்வார் பாசுரங்களைக் கம்பரும், எம்பெருமானும் அமைக்கும் எழில் இதோ,

ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது
இரங்கி மற்றுஅவற்கு இன்னருள் சுரந்து
மாழை மான்மட நோக்கி உன்தோழி
உம்பி எம்பிஎன்று ஒழிந்திலை உகந்து

தோழன் நீஎனக்கு இங்குஒழி என்ற
சொற்கள் வந்துஅடியேன் மனத்து இருந்திட
ஆழி வண்ண நின்அடியிணை அடைந்தேன்
அணிபொழில் திருஅரங்கத்து அம்மானே
- திருமங்கையாழ்வார்

சித்திரகூடத்து இருப்ப சிறுகாக்கை முலைதீண்ட
அத்திரமே கொண்டெறிய அனைத்துலகும் திரிந்தோடி
வித்தகனே இராமாவோ நின்அபயம் என்றழைப்ப
அத்திரமே அதன்கண்ணை அறுத்ததும் ஓர்அடையாளம்
- பெரியாழ்வார்

ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு எம்பி நின்தம்பி, நீ
தோழன், மங்கை கொழுந்தி எனச்சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள்

ஏக வாளி அவ் இந்திரன் காதல்மேல்
போக ஏவி, அது கண் பொடித்த நாள்
காகம் முற்றும் ஓர் கண்இல ஆகிய
வேக வென்றியைத் தன் தலைமேல் கொள்வாள்
- கம்பன்

அம்பி தனில்கங்கை கடக்கவிட்ட
அவனைப் பார்த்துனக்கு இவள்கொழுந்தி,
எம்பி நின்தம்பி, நீஎன்தம்பி
என்று கூறியதோர் கருணைச்சொல்லும்,
தம்பி பரதன்பொன் முடிதுறந்து
தரித்த சடையைக் கண்டு இரங்கியதும்,
வெம்பு சயந்தற்கும் காகங்கட்கும்
விழிஒன்று அளித்ததுவும் வியந்துகொள்வாள்.
- எம்பெருமான்

சந்திரனுக்கு சானகி தன்னைவிட அழகான முகம் உடையாளாக இருப்பது பற்றிப் பொறாமை. பிரிவாற்றாது தவிக்கும் இராமனை வெல்ல நல்ல தருணம் இது என்பதுபோல வானில் திங்கள் உதித்ததாம். கம்பர், தக்கை கவிதைகளைக் காணுவோம்.

ஒன்றும் உட்கறுப்பினோடு, ஒளியின் வாள் உரீஇ
தன் தனிமுகத்தினால் என்னைத் தாழ்த்துஅற
வென்றவள் துணைவனை இன்று வெல்குவேன்
என்றது போல வந்து எழுந்தது இந்துவே.
- கம்பன்

கோல முகத்தாலே தன்னைவென்றாள்
கொழுநன் தனைவெல்லக் குளிர்சோமன்
கால வலைவீசிக் கதிர்வேலால்
கண்விட்டு அகலானைக் காய்தலுற்றான்.
- எம்பெருமான்

படைக்கலம் இல்லாத படையை வென்றால் பழி என்று விட்டேன், என்னை வென்று மீள்வீரோ என்று இராவணன் வானர வீரரை ஏளனம் செய்கிறான். தக்கை இசைப்பாவும், அதன் மூலமும் காண்க,

கல்கொண்டும் மரங்கள் கொண்டும்
கைக்கொண்டும் களித்து நும்வாய்ச்
சொல்கொண்டும் மயிரின் புன்தோல்
தோள்கொண்டும் தள்ளி வெள்ளிப்
பல்கொண்டும் மலைகின் றாரின்
பழிகொண்டு பயந்தது; யான்ஓர்
வில்கொண்டு நின்ற போது
விறல்கொண்டு மீள்திர் போலாம்.

- கம்பன்

மலைஎடுத்தும் கல்எடுத்தும்
மரமெடுத்தும் கரமெடுத்தும்
கொலைஎடுக்கத் துணிந்தீரோ?
குரங்குகளும் எனக்குஇலக்கோ?
சிலைஎடுத்து நின்றஎன்னைச்
செயம்கொடுக்க வந்தீரோ
தலைஎடுத்தும் போவீரோ
என்றுஅரக்கன் தான்நகைத்தான்.

- எம்பெருமான்

பொன்னிற மேனியான் இலக்குவன் களத்தில் வீழ்ந்துவிட அவனை எடுத்து இராவணன் ஓடுகிறான். கயிலை மலையை எடுத்தது போதாது என்று மேருமலையும் எடுக்கத் தலைப்பட்டான் என்கின்றனர் கவிஞர் மன்னர் இருவோரும்,

உள்ளி வெம்பிணத்து உதிரநீர் வெள்ளத்தின் ஓடி,
அள்ளி அம்கைகள் இருபதும் பற்றி, பண்டு அரன் மா
வெள்ளி அம்கிரி எடுத்தது வெள்கினான் என்ன
எள்ளில் பொன்மலை எடுக்கல் உற்றான்என எடுத்தான்

-கம்பன்

பேமேயும் நிணச்சோறும்
பிணக்காடும் இடைமிடைந்த
ஈமேயும் வெங்களத்தே
இருபதுதோள் உறத்தழுவி
பூமேயும் கயிலாயப்
பொருப்பெடுத்தான் போதாமல்
மாமேரு எடுப்பவன்போல்
வள்ளல்தம்பி தனைஎடுத்தான்.

- எம்பெருமான்

மேற்கொண்டு ஒரு உவமையணிக் காட்சியைத் தோற்றுவிக்கின்றனர் கவிஞர்கள். அவுணர் மன்னன் கருங்கடலைப் போலிருக்க, அவனது இருபது கைகள் அலைகளை ஒத்திருந்தனவாம். அலைகடலில் தோன்றும் ஆதவன்போல் இலக்குவன் விளங்கினான். குமரிக் கடலில் கதிரவனின் தோற்றம் நமக்கு மனதுள் எழுகிறது.

தலைகள் பத்தொடும் தழுவிய தசமுகத் தலைவன்
நிலைகொள் மாக்கடல் ஒத்தனன் கரம்புடை நிமிரும்
அலைகள் ஒத்தன, அதிலெழும் இரவியை ஒத்தான் -
இலைகொள் தண்துழாய் இலங்குதோள் இராமனுக்கு இளையான்.

-கம்பன்

பாரியவான் தலைசாய்த்துப்
பரிந்தெடுத்த வாளரக்கன்
காரியநீள் கடலைஒத்தான்
கரங்களெலாம் திரையைஒத்த,
வீரியமாய் அதிலுதிக்கும்
சூரியன்போல் விளங்கலுற்றான்
சீரியமா மறைக்குமெட்டாச்
சீராமற்கு இளையவனே.

- எம்பெருமான்

பொதுவாக கம்பனின் இரண்டு அல்லது மூன்று விருத்தங்களை ஒரு தக்கைப் பாவாக்கும் இயல்பினர் எம்பெருமான். ஆயினும் சிலநேரத்தில், பொருளை நன்கு விளக்குமுகமாக, கம்பர் விருத்தத்துக்கு நேரான தக்கைப் பாட்டும் பாடியுள்ளார். முதல் நாள் யுத்தத்தில் தோற்று இராவணன் இலங்கை செல்கிறான். இரு கவிஞர் பெருமான்களும் விவரிப்பர்,

வாரணம் பொருத மார்பும், வரையினை எடுத்த தோளும்,
நாரத முனிவற்கு ஏற்ப நயம்பட உரைத்த நாவும்,
தாரணி மவுலி பத்தும், சங்கரன் கொடுத்த வாளும்,
வீரமும் களத்தே போட்டு வெறுங்கையே மீண்டு போனான்.

- கம்பன்

வேழமருப்பு அற்ற மார்புரமும்
வெள்ளிமலை கொண்ட தோள்மிடுக்கும்
வாழ வரம்தரும் நாரதர்முன்
மறைஆயிரம் சொன்ன வாய்வலியும்
ஈழ மணிமின்னும் மகுடம்பத்தும்
ஈசன் அருளிய கதிர்வாளும்
தாழ வீரமும் திறைகொடுத்துத்
தனியே வெறுங்கையான் நடந்துசென்றான்

- எம்பெருமான்

மாயத்தால் சீதைபோல் உருவமைத்து, உயிர்கொடுத்து, அப் பொய்மாதை வாளுக்கு இரையிடுவதாக இராவணன் மைந்தன் அனுமன்முன் காட்டி அலக்கழிகிறான். கொலைக்குப் பின்னர் அயோத்தி நகரை அழிப்பேன் என்று வானில் படையொடு பாய்ந்து மறைகிறான். மாருதி தான் சாதித்ததெல்லாம் வீணே என்று அங்கலாய்க்கிறான். கம்பரும், எம்பெருமானும் அவலச்சித்திரம் தீட்டுகின்றனர்,

அருங்கடல் கடந்து, இவ்வூரை அள்ளரி மடுத்து, வெள்ளக்
கருங்கடல் கட்டி, மேருக் கடந்து ஒரு மருந்து காட்டி,
குரங்கு இனி உன்னோடு ஒப்பது இல்என, களிப்புக்கொண்டேன்
பெருங்கடல் கோட்டம் தேய்த்தது ஆயது என் அடிமைப்பெற்றி.

- கம்பன்

வேலை கடந்துஇந்த இலங்கைசுட்டு
மேரு கடந்துஅந்த மருந்துதந்து
வேலை நிகர்வண்ணற்கு உகப்பாக
மேம்பட்டு இருந்தஎன் அடிமைஎல்லாம்
வேலை தனில்காயம் கரைத்தாற்போல்
வெறிதே ஒழிந்திட்டதுஇனி என்செய்வேன்
வேலை தனைத்தாவி அரக்கன்சென்றான்
வேந்தன் திருநகர்க்கு உறுவதுஏதோ
- எம்பெருமான்

புலவர்கள் நன்கு சிந்தித்துப் பாடும் பொருள் என்றென்றும் நிலைபெற்று விளங்குதல் போலவே, இராமன் செம்மையுடன் தொடுக்கும் பாணமும் காலமெல்லாம் அறத்தை நிலைபெறச் செய்யும். முதல் நூலிலும், வழிநூலிலும் மிளிரும் கவிதைகள் இதோ,

நல்லியல் கவிஞர் நாவில் பொருள்குறித்து அமர்ந்த நாமச்
சொல்லென செய்யுள் கொண்ட தொடைஎன தொடையை நீக்கி
எல்லையில் சென்றும் தீரா இசைஎன பழுதுஇலாத
பல் அலங்காரப் பண்பே காகுத்தன் பகழி மாதோ
- கம்பன்

ஆர்த்துஎழுத்து சொல்பொருள்யாப்பு
அலங்காரக் கவிப்புலவர்
சீர்த்துஎடுத்து வரத்தொடுக்கும்
செய்யுளொக்கும் சரத்தொடைதான்
போர்த்துரைத்துச் செம்மைஉண்டாய்ப்
புலவர்எலாம் புகழ்ந்துஏத்த
கூர்த்துஅரக்கன் தலைசாய்த்துக்
கொண்டாடும் திறத்தாலே.
- எம்பெருமான்

அத்தகைய இராமன் வாளி இராவணனுக்கு ஈசன் அளித்த முக்கோடி வாழ்நாளும், வரங்களும், வலிமை அனைத்தையும் வென்று அரக்கன் உயிரைத் தின்று புறம் சென்றதைக் கம்பரும், எம்பெருமானும் பாடுவதைப் பார்ப்போம்.

முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமும் முதல்வன் முன்நாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய்
எனக்கொடுத்த வரமும் ஏனைத்
திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும் தின்று மார்பில்
புக்கோடி உயிர்பருகிப் புறம்போயிற்று
இராகவன்தன் புனித வாளி.
- கம்பன்

அக்கோடு மதிஅணிவோன்
அரன்அருளால் அரக்கனைநீ
கைக்கோடி எனக்கொடுத்த
கணக்குஇல்வர வலியும்ஆயுள்

*முக்கோடி யாய்உளதே*
*முடியஅவன் உயிரைஉண்டு*
*மிக்கோடிப் புறம்கடந்து*
*விசைத்ததுரா கவன்பகழி.*

*- எம்பெருமான்*

## 5. கம்பருக்கு வாய்த்த சடையன்போல்

*காவிரிக் கரையில் வெண்ணெய் நல்லூர் உள்ளது. அவ்வூரில் பண்ணைத் தொழில் புரிந்த சடையப்பர் ஆதரவில் கம்பர் பெருங்காவியம் பாடினார். சோழ நாட்டில் வெண்ணெய் நல்லூரும், தொண்டை மண்டலத்தில் பாலூரும், தென்பாண்டி தேசத்தில் நெய்யூரும் உள்ளது போலவே கொங்குநாட்டில் மோரூர் உள்ளது. மோரூரில் வாழ்ந்த அத்தப்பன் என்பானின் மகன் நல்லதம்பிக் காங்கேயன். எம்பெருமான் கவிராயரின் புரவலன். தனக்கு உதவி செய்த உயிர்நண்பன் சடையனைக் கம்பர் தம்படைப்பில் போற்றி இடம் கொடுத்து வாழவைத்தார். எம்பெருமான் சடையனை அறிகிலார். ஆனால், நல்லதம்பியை நேரில் கண்டு பழகியவர். சடையன் புகழ் கம்ப இராமாயணத்தில் பத்து இடங்களில் பொதிந்துள்ளது. அக்கவிதைகளுக்குச் சமமாகவும், மேற்கொண்டு சிற்சில இடங்களிலும் தான் நன்குணர்ந்த நல்லதம்பியின் பண்பை எம்பெருமான் தக்கையிசை நூலில் புகழ்ந்துள்ளார்.*

*பொழுது சாய்ந்த வேளை. இருள் தன்கைகளாகிய அந்திமாலையைப் பரப்பி உலகைச் சூழ்ந்தது. இருளை உண்ண நினைத்துத் திங்கள் நிலாக்கதிரைப் பாய்ச்சியது. இருளின் கைகளாக மாலைநேரத்தையும், மதியம் உண்ண விரும்பும் ஊணாக இருளையும் கம்பர் உருவகம் செய்கிறார். உருவகத்துக்குப் பின்னர் உவமை ஒன்றை உபயோகிக்கிறார். நன்கு தெரிந்த பொருளை உவமையாகக் கூறித் தெரியாததை விளக்குவது இயல்பு. அஞ்சல் என்ற சொல்லும் அடையா நெடுங்கதவும் உடைய சடையன் புகழ் பரந்து விளங்குவது கம்பர் காலத்தில் அனைவரும் அறிந்தது. அதுபோல் மதியம் வெண்ணிலாவை வீசியதாம்!*

*வண்ண மாலைக் கைபரப்பி,*
*உலகை வளைந்த இருளைஎல்லாம்*
*உண்ண எண்ணித் தண்மதியத்து*
*உதயத்து எழுந்த நிலாக்கற்றை*
*விண்ணும் மண்ணும் திசைஅனைத்தும்*
*விழுங்கிக் கொண்ட விரிநல்நீர்ப்*
*பண்ணை வெண்ணெய்ச் சடையன்தன்*
*புகழ்போல் எங்கும் பரந்துளதால்.*

*இதற்கு நேரான தக்கைப் பாடலில் நல்லதம்பியின் கீர்த்தி போலத் தண்ணிலா எங்கும் தழைத்தது என்று எம்பெருமான் பேசுவார்.*

*விமுகம் பாலையுந்தி வெண்கஞ்சம்போல்*
*வெண்மா மதிவெள்ளிக் கும்பம்தன்னில்*
*கமுகம் இளம்பாளை விரிந்ததுபோல்*
*ககனம் பழையதென்று புதுக்குகைபோல்*
*சுமுகன் மோரூர்வாழ் அத்தப்பன்சொல்*
*தோன்றல் நல்லதம்பி கீர்த்திஎங்கும்*
*சமுகம் பலரும்கொண் டாடும்வண்ணம்*
*தண்ணிலா எங்கும் தழைத்ததம்மா.*

முதல்நாள் போர் விளைந்தபோது ஒரு முக்கியக் கட்டம். இலக்குவனுக்கும் அரக்க வீரருக்கும் கடும் இகல் நடக்கிறது. அரக்கர் தம் தலைவனை இம்மனிதன் நேரில் பொருத விடக் கூடாது என்று அனைவரும் கூடி எதிர்த்தனர். ஒருவன்மேல் பலர் எதிர்க்கச் சென்றது, ஒரு வள்ளலிடம் இரவலர் பலர் பரிசில் ஏற்கச் சென்றது போல்தான் என்பார் கம்பர்.

உறுபகை மனிதன், இன்று, எம்இறைவனை உறுகிற்பானேல்
வெறுவிது நம்தம் வீரம் என்று ஒரு மேன்மை தோன்ற
எறிபடை அரக்கர் ஏற்றார் - ஏற்ற கைம்மாற்றான் என்னா
வறியவர், ஒருவன், வண்மை பூண்டவன்மேல் சென்றென்ன.

வண்மை பூண்டவன் என்று கம்பர் உரைப்பது நம் கவிஞர் எம்பெருமானுக்குத் தனது தாளாளன் ஆகிய நல்லதம்பியை நினைக்கச் செய்கிறது. அடுத்து வரும் கம்பர் கவிதைகளில் அரக்கர் தோற்று ஓடுகின்றனர். அச்செய்தியையும் சேர்த்து எம்பெருமான் நல்லதம்பி புகழை தாளகதிக்குத் தக்கவாறு குடகம் என்னும் வரிப்பாட்டாக விரித்து இசைக்கிறார். இலக்குவன் எறிந்த படைகளை ஏற்று அரக்கர் அஞ்சி ஓடிய செய்கையானது, மோரூர் வள்ளல் வழங்கிய செல்வத்தை ஏற்றுப் புலவர் வறுமை ஓடுவது போன்றது தானாம்.

தோடுலவு வாகைஅணி
சிலைஇளைய பெருமாள்
தொட்டகணை பட்டுநிலை
கெட்டுமிடல் அரக்கர்
முடிவரு பெரும்படைகள்
அத்தனையும் அறவே
மோரூரில் வாழ்அத்த
நாரிதரு முருகன்
தேடுபுகழ் நலதம்பி
விருதுமண்ட லீகன்
தென்னவனின் மகுடசூ
டாமணியை என்றும்
நாடிவரு வாணர்கலி
ஓடுவது போலே
நாலுதிசை தோறுமிக
ஓடினர்கள் தாமே.
- எம்பெருமான்

கும்பகருணனைக் கொல்லும் நேரம். இராமன் என்னதான் அம்புகளை எய்தாலும் அவன் மார்பில் புகவொட்டாது மார்புக் கவசம் தடுத்தது. தவ வலிமையால் ஈசனிடம் பெற்ற கவசம் அது. சங்கரக் கவசம் என்பது தெரிந்து, சிவபெருமான் படைக்கலம் ஆகிய பாசுபதக் கணை விடுத்து இராமன் அரக்கனின் கவசத்தைத் தகர்த்தான் என்பார் கம்பர்.

தாக்குகின்றன நுழைகில, தலையது
தாமரைத் தடங்கண்ணான்
நோக்கி இங்கு இது சங்கரன் கவசம் என்று
உணர்வுற நுனித்து உன்னி
ஆக்கி அங்கு அவன் அடுபடை தொடுத்து விட்டு
அறுத்தனன், அது சிந்தி
வீக்கு இழந்தது, வீழ்ந்தது வரைசுழல்
விரிசுடர் வீழ்ந்தென்ன.

கும்பகருணன் அணிந்திருந்த சங்கரக் கவசத்தை, இராமன் சங்கரன் கணையால் அறுத்தான். சடையப்ப வள்ளலின் தந்தை சங்கரன். இரவு நண்பகல் ஆகிலென் என்று தொடங்கும் பாடலில் சங்கரன் தரு சடையன் என்றொரு தருமதேவதை எனப் பரராச சிங்கன் பாராட்டியுள்ளான்.

தேனார் தொடையார் பரராச
சிங்கப் பெருமான் செந்தமிழ்க்குக்
கானார் நெல்லின் மலைகோடி
கண்டி நாடு கரைசேரக்
கூனார் கப்பல் ஆயிரத்தில்
கொடுபோய் அளித்த கொடைத்தடக்கை
மானா கரன்சங்கரன் சடையன்
வளம்சேர் சோழ மண்டலமே

என்பது சோழ மண்டல சதகச் செய்யுள். 'சங்கரன்', 'சங்கரன்' என்று கம்பர் பாடுவது எம்பெருமானுக்குச் சடையன் குடும்பத்தை உள்ளத்தில் தோற்றுவிக்கிறது. தம்மிடம் நட்புக் கெழுமிய வள்ளலின் தந்தை, மகட்கொடை அளித்த மாமன் என்பவர் பெயர்களோடு முல்லைக் கொடிக்குத் தேரீந்த பாரிபோல் வாரி வழங்கிடும் நல்லதம்பி பெயர் கால வெள்ளத்தில் கரையாது காத்துவிடுகிறார்.

*வில்லத் தொடையானைத் தொழும்தீர்த்தன்*
*விழியன் படைகண்ட ராசாளி*
*மல்லைப் பிறவிக்கு நல்லான்தன்*
*மருகன் விருதுமண்டலிகன் கண்ணன்*
*முல்லைக்கு இறைஅத்த நாரிமைந்தன்*
*மோரூர் வாழ்கின்ற நல்லதம்பி*
*சொல்லைப் போல்ஈசன்கணை தொட்டுஎங்கோன்*
*துணித்தான் அரக்கன்தன் கவசம்தன்னை.*

## 6. ஒளிர்பொன்னின் உரைகல்

தமிழ் எனும் சொல்லைக் கம்பர் ஆளும்போதெல்லாம் இனிமை என்ற பொருளிலோ, அகத்தியருடன் தொடர்புற்றோ பயன்படுத்துகிறார். தமிழுக்கு முதல் இலக்கணம் வகுத்த பொதிய முனியின் படிமங்கள் இந்தோனேசியா, கம்போடியா, தாய்லாந்து நாடுகளில் கிடைக்கின்றன. தமிழ்க் கல்வெட்டுக்களும், தமிழ் வழக்கங்களும் விரவியுள்ள அந்நாட்டு மாந்தர் அகத்தியரை வழிபடுகின்றனர். தமிழ் எனும் அளப்பரும் சலதி தந்தவன், நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான், அலை நெடும் புனல் அறக் குடித்தவன் என்றெல்லாம் கம்பர் அகத்தியரைப் பற்றிச் சொல்லுகிறார். கடல் கடந்து பரவிய தமிழ்ப் பண்பாட்டின் குறியீடாக அகத்தியர் விளங்கினார் என்பது பன்னாட்டுத் தொல்லியல் சான்றுகளாலும், கம்பர் வாக்காலும் உறுதிபெறுகிறது.

ஒருமொழி பேசுவோர் பேரரசுகளை அமைக்கும் செம்மாந்த நேரத்தில், அம்மொழியில் காப்பியங்கள் உருக்கொள்கின்றன. சோழர்காலத் தமிழர் வங்கம்வரை வென்றும், திரைகடல் ஓடித் தென்கிழக்கு ஆசியாவில் வணிகத்திற்காய்ச் சென்றும் புகழ்பெற்ற தருணத்தில் கம்பர் வாழ்ந்தவர். அனைவரும் அறிந்த கதை ஒன்றைத் தேர்ந்து கொண்டு, கவித்திறத்தின் மாட்சியை உலகுக்குத் தெரிவித்தார். தமிழையும் இராமன் கதையையும் ஒருங்கு வைத்துக் கம்பர் கண்ட ஒற்றுமைக் காட்சி அவர் காப்பியம். கம்பர் கங்கை என்பார்; சரயு என்பார்; அயோத்தி என்பார்; மிதிலை என்பார். ஆனால், உள்ளக் கிடையாய் வருவன எல்லாம் காவிரியும், வைகையுமே; உறையூரும், மதுரையும்தான்.

இராமனுக்கு உழவர்களைக் கொண்டு முடிசூட்டும் கம்பர் தமிழுக்கு அழியாத அன்புமுடி சூட்டிவைத்தார். முத்தையும், முத்தமிழையும் தருதலால் தேவர்கள் திருநாட்டையும் விஞ்சுவது தென்தமிழ்நாடு என முத்தாய்ப்பு வைப்பவர் அல்லவா.

கம்பராமாயணத்தின் தனிக்காப்பியச் சிறப்பும், அதன் கற்பனைத் திறனும், உன்னதமான கருத்துக்களும் எம்பெருமானை முற்றிலும் தன்வயம் ஆக்கியிருந்தன. அந்தத் தெய்வமாக் கவிதையின் அழகு அனைத்தையும் ஆழ்ந்து அனுபவித்து அந்த ஆனந்தத்திலேயே திளைத்திருந்தார். தம் அனுபவத்தை எடுத்து வழங்குவதையே வாழ்வின் தனிப்பெரும் நோக்காகக் கொண்டு, அதற்கென்றே தம்மைத் தத்தம் செய்திருந்தார். அதனால் இவரது உள்ளத்திலிருந்து உணர்ச்சி மயமாய்க் கம்பரது கருத்துக்கள், கற்பனைகள், அவைகளைத் தாங்கி நிற்கும் சொற்கள், சொற்களைத் தொடுத்த தொடர்கள் எல்லாம் அடுக்கடுக்காய் எழுந்து ஒன்றோடொன்று இசைந்து கானவிலாசமாய் உளங்கசிந்து பெருகியதுதான் தக்கை ராமாயணம்.

கம்பரது எழிற்கீதத்திலே தோய்ந்து தோய்ந்து, அதன் வயமாகி, அதை இசைப்பதற்கென்றே ஓர் அரும்பெரும் வீணையாகத் தம்மை மாற்றி அமைத்துக் கொண்டார் எம்பெருமானார். அவர் வெறும் புலவர் மட்டும் அல்லர்; பெருமை படைத்த அடியார், சுவைஞர், கவிஞரும்கூட. கொங்கு நாட்டுத் தமிழ்க்கொடையாம் கம்பர் வழிநூலால் கவிச்சக்கரவர்த்தி அடைந்த மதிப்பு, சிறப்புக்களுக்கு ஓர் அளவில்லை.

நவீனத் தமிழ் இலக்கியத்தின் குறிக்கோள் மக்களைச் சென்று அடைய வேண்டும் என்பதே. மேலை நாட்டாரின் தாக்கத்தால் உருவான உரைநடையால் இதைச் சாதிக்க இயலுகிறது. எளிய சொற்களுடன் பாடப்பெற்ற தக்கை ராமாயணம் கம்பருக்கு ஒரு திறனாய்வு நூல். கோபுரத்தின் உச்சியில் தங்கப் பதுமையாய் மாத்திரம் தமிழ் இலக்கியங்கள் இருப்பதில் எம்பெருமானுக்கு உடம்பாடு இல்லை. அவை மக்கள் மத்தியில் வாழத் தனிப்பாதை வகுக்கும் முயற்சியில் பெருவெற்றி அடைந்துள்ளார். தூய ஆணிப்பசும் பொன்னாம் கம்பர் காவியத்தின் உன்னதத் தரத்தைத் தமது இசைநூலென்னும் உரைகல் மூலம் எடுத்துக்காட்டியவர் எம்பெருமான். தக்கை இராமாயணத்தை படித்துப் பாடினால், கம்பர் உள்ளத்தில் புகுந்துவிடலாம். எம்பெருமான் கவிவழியில் இன்னிசை வடிவாய் நமது சங்க இலக்கியம், ஐம்பெரும் காப்பியம், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் சாரத்தை இசையாகவும், நாடகமாகவும், நடனமாகவும் வடித்தெடுத்து அச்சேற்றியும், கலைவிழாக்கள் ஆகவும் பட்டி தொட்டிகளில் எல்லாம் பைந்தமிழின் பாமணம் கமழப் பரப்பிட உழைப்போம். ♦